# தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை, தென்காசி
# மாவட்ட அலுவலரின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : செல்வி. ஜெ. கவிதா, பி.டெக்.,
மாவட்ட அலுவலர்.

நாள் : 29.03.2021.

ந.க.எண் : 1939 /அ/2021-1

பொருள் : பணித் தொகுதி - தீயணைப்பு-மீட்புப்பணித்துறை - தென்காசி மாவட்டம் - மாவட்ட அலுவலர் அலுவலகம் - தட்டச்சர் செல்வன். க. சுரேஷ் குமார் என்பவரை - தட்டச்சர் பதவியில் - பணிவரன் முறை செய்து- ஆணைகள் வழங்குதல்.

பார்வை : 1) 27.02.2019-ஆம் நாளிட்ட தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை, இயக்குநர் அவர்களின் குறிப்பாணை ந.க.எண்: 4066/ஆ1/2019.

2) 07.03.2019-ஆம் நாளிட்ட தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை, கன்னியாகுமரி மாவட்ட அலுவலர் செயல்முறை ஆணைகள் ந.க.எண்: 1926/அ/2019.

----

பார்வை 1-ல் காணும் தீயணைப்பு-மீட்புப்பணித்துறை இயக்குநர் அவர்கள் குறிப்பாணையில் கன்னியாகுமரி மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் உள்ள தட்டச்சர் பதவி காலியிடத்திற்கு 2015-2016, 2016-17 மற்றும் 2017-2018 ம் ஆண்டு காலியிட மதிப்பீட்டின் படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தட்டச்சரை நியமனம் செய்து ஆணைகள் வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க செல்வன். க. சுரேஷ் குமார் (பதிவு எண்: 26140119) என்பவரை பார்வை 2ல் கண்ட ஆணைகளின் படி, 07.03.2019 முதல் தட்டச்சராக நியமனம் செய்து பணி புரிந்து வருவதை தொடர்ந்து, இவரது பணியினை தட்டச்சர் பதவியில் கீழ்கண்டவாறு வரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

**ஆணைகள்:-**

கன்னியாகுமரி மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டு தற்போது தென்காசி மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் செல்வன். க. சுரேஷ் குமார் (பதிவு எண்: 26140119) என்பவர் 07.03.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். எனவே, செல்வன். க. சுரேஷ் குமார் (பதிவு எண்: 26140119) தட்டச்சர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 07.03.2019 முதல் தட்டச்சர் பதவியில் பணி வரன் முறை செய்து இதன் மூலம் ஆணைகள் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணி வரன்முறை செய்யப்பட்ட விவரம் இவரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது எனச் சான்றிடப்படுகிறது.

29/03/2021

மாவட்ட அலுவலர்,
தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை,
தென்காசி மாவட்டம்.

பெறுநர்: செல்வன். க. சுரேஷ் குமார் தட்டச்சர்,
மாவட்ட அலுவலர் அலுவலகம், தென்காசி மாவட்டம்,

நகல்: இயக்குநர், தீயணைப்பு-மீட்புபணித் துறை, எழும்பூர், சென்னை -8.

நகல்: துணை இயக்குநர், தீயணைப்பு-மீட்புபணித்துறை, தென்மண்டலம், மதுரை -1.